
# கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு



ஆடி 2005 ஜூலை 1974

30 காசு

அறிவியல்
வரலாற்றுத்
திங்களிதழ்

# கொங்கு

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*

தேனடை 4 | 15-7-74 | தேனீ 7


## வணக்கம்

கல்லூரிகளில் இன்னொரு வேடிக்கை பயிற்றுமொழி பற்றியது. ஆங்கிலத்தில் அளவாக எடுத்துத் தேறியவர்கள் கூட, ஆங்கில வழியே படிக்கவேத் துடிக்கின்றனர் தமிழ்வழி என்றதும் கண்ணீர் விட்டனர் பலர். இது வெறும் மயக்கம் என்பதை அவர்கள் உணரவில்லை.

ஆங்கிலம் வழியாகப் பயின்றால் வெளிமாநிலம் சென்று வேலை செய்யலாம் என்ற நப்பாசை இன்னும் விடவில்லை. 'மண்ணின மைந்தர்' கொள்கையால் அந்தந்த மாநிலத்தார் அடுத்தாரை விடுவதில்லை. இதுநாள்வரை தமிழகமே வந்தாரை வரவேற்பதில் முன்னின்றது. இனி அதுவும் இல்லை. எனவே பிற மாநிலத்தில் வேலை என்பது பகற்கனவு.

தமிழகத்தில் தலைநகரத்து மக்களைத்தவிர, மாநில மக்கள் அறிந்தது தமிழ் மட்டுமே அதை முழுதுணர்ந்த தமிழரசு, தமிழ் ஆட்சிமொழித் திட்டம் கொண்டு வந்தது. ஆனால் அரசாங்க அதிகாரிகளோ, அதை நிறைவேற்ற முனைவதே இல்லை. ஆட்சியின் எண்ணம் அதிகாரிகளிடம் பிரதிபலிக்கவில்லை. அதனால் ஆங்கிலமோகம் மறைய வழியில்லை.

கல்வியாளர்களும் தவறி விட்டனர் மொழிக்கு முதன்மை தந்து, பாடத்தைக் கோட்டை விடுகின்றனர்.

வகுப்பில், ஆங்கிலம், தமிழ் இரண்டும் கலந்து தேவைக்கேற்ப சொல்லித் தரலாம் இறுதித் தேர்வில் பாகுபாடின்றி எந்த மொழியில் வேண்டுமாயினும் பதில் எழுதலாம் என்ற நிலைமையே இதற்கு மாற்று. மாணவனுக்கு எதில் சொல்லத் தெரிகிறதோ, அதைப் பயன்படுத்தலாம். நுழைவின் போதே ஆங்கிலம், தமிழ் என அல்லலுற வேண்டாம் இதனால் புரிந்து கொண்ட மொழியில் விடை எழுதலாம். பார்வை நூல்கள் படிக்குமளவு ஆங்கில அறிவும் இருக்கும்.

தில்லிப் பல்கலைக் கழகம் இந்த முறையைத்தான் பின்பற்றுகிறது. தமிழ்மொழி வளர்ச்சிக்காக இதைக் கூறவில்லை. மாணவர்களின் அறிவு, தத்தம் பாடத்திலான புலமை வளரவே விழைகின்றோம்.

—ஆசிரியர்.

# அணு சக்தியும் ஆக்கப் பயன்களும்

S. இராமசாமி Ph. D. Scholar,
இந்திய வேளாண்மை
ஆராய்ச்சி நிலையம்,
புதுடில்லி-110012.



## அணுவும் அணு சக்தியும்

அணு (atom), மூலகத்தின் (element) மிகச்சிறிய துணுக்கும் இரசாயனக் கிரியைகளில் பங்கு பெறும் பகுதியுமாகும் அதன் மத்தியில் உள்ள அணுமையத்தில் (nucleus) நேர் மின்சாரத்தைக் கொண்ட துகள்களாகிய புரோடான்களும் (Protons) மின்சக்தியற்ற நியூட்ரான்களும் (neutrons) இருக்கின்றன. அணுமையத்தைச் சுற்றி எதிர் மின்சாரத்தைக் கொண்ட எலக்ட்ரான்கள் (electrons) அவற்றின் பாதையில் சுற்றி வருகின்றன. நியூட்ரானின எடை கிட்டத்தட்ட புரோடானின் எடை அளவே, புரோடான்களின் மொத்த எண்ணிக்கை அணு எண் (Atomic number) எனப்படும். இவற்றின் எண்ணிக்கை எலக்ட்ரான்களின் எண்ணிக்கைக்குச் சமம். புரோடான், நியூட்ரான் இவற்றின் கூட்டு எண்ணிக்கை அணு அடர்த்தியை (mass) நிர்ணயிக்கின்றன. இவற்றின் கூட்டு எண்ணிக்கை அடர்த்தி எண் (mass number) எனப்படும்.

அணு எண் ஒன்றாகவும் அடர்த்தி எண்கள் வேறாகவும் இருந்தால் அவை ஒரே மூலகத்தின் ஐஸோடோப்புகள் (isotopes) எனப்படும். எடுத்துக்காட்டாக அணு எண் 92ஐ உடைய மூலகமாகிய யுரேனியத்தின் அடர்த்தி எண்கள் 233, 235, 238 ஆக இருந்தால் அவை U-233, U-235, U-238 என்று குறிக்கப்படும். இதில் 'U' யுரேனியத்தையும், அதைத் தொடர்ந்து வரும் எண்

கள் அணு அடர்த்தியையும் குறிக்கின்றன. இந்த ஐசோடோப்புகளில் 92 புரோடான்களும், முறையே 141, 143, 146 நியூட்ரான்களும் இருக்கின்றன. இதேபோல் ஹைடிரசனில் மூன்று ஐசோடோப்புகள் இருக்கின்றன அவை நியூட்ரான் இல்லாத H-1 [ஹைடிரசன் – Hydrogen] ஒரு நியூட்ரானைக் கொண்ட H-2 [டியூடிரியம்–Deuterium] இரண்டு நியூட்ரான்களைக் கொண்ட H-3 [டிரிஷியம்-Tritium] ஆகியவைகளாகும்.

உருகி இணையும் கிரியையில் (Fusion reaction) டிரிஷியம் (H-3) டியூடீரியத்துடன் (H-2) இணைந்து ஹீலியம்-4 (He-4) என்னும் புதிய மூலகமும், ஒரு நியூட்ரானும் வெளிப்படுகின்றன. ஹீலியம் -4 இன் அணு மையத்துகள்கள் டிரிஷியம், டியூடீரியத்தின் அணு மையத் துகள்களைக் காட்டிலும் மிக நெருக்கமாகக் கட்டுண்டு இருப்பதால் 17.6 Me V (Millian electron volts) சக்தி வெளிப்படுகிறது. இது தளர்ச்சியான தொகுதி (loose system) நெருங்கிச் சேரும்போது சக்தி வெளிப்படுகிறது என்னும் தத்துவத்தில் அமைந்தது மேலும் புதிய மூலகம் ஹீலியம் அதன் தாய் மூலகங்களிலிருந்து ஒரு அடர்த்தி எண் குறைவாக இருக்கிறது. இந்த எடை வேறுபாடு சக்தியாக வெளிப்படுகிறது. இது ஐன்ஸ்டீனின் எடை-சக்தித் தொடர்பு சமநிலைக் கூற்றை (equation) அடிபபடையாகக் கொண்டது.

யுரேனியம்-235 இன் அணுமையத்தை ஒரு நியூட்ரான் தாக்குதலால் கிளர்ச்சியூட்டபபெற்ற அணுமையத்தை உடைய யுரேனியம்-236 தோன்றுகிறது. இப்புதிய அணு கிட்டத்தட்ட சம அளவும் அணு எண் 80 ல் இருந்து 150 வரையும் உடைய இரு துண்டுகளாக உடைகிறது. இது வெடித்தல் முறை (Fission process) எனப்படும் இதனால் 200 Me V சக்தி வெளிப்படுவதுடன் இரண்டு அல்லது மூன்று நியூட்ரான்களும் வெளிப்படுகின்றன. இந்த நியூட்ரான்கள் மீண்டும் யுரேனியம்-235 ஐத் தாக்கி மேலும் அதிக சக்தியையும், நியூட்ரான்களையும் தோற்றுவிக்கின்றன. இந்நிகழ்ச்சி சங்கிலித் தொடர்போல் நிகழ்கிறது.

நியூட்ரான் உந்தப்பட்ட வெடித்தல் நிகழ்ச்சி யுரேனியம்-235 யுரேனியம்-233, புளூடோனியம்-239 (Pu-239) இவற்றில் மிக எளிதாக நிகழ்கிறது அணு எண் 94ஐ உடைய புளூடோனியம் இயற்கையில் கிடைப்பதில்லை. இவை இனப்பெருக்கி ரியாக்டர்களில் (breeder reactors) உற்பத்தி செய்யப்படுகின்றன. யுரேனியம்-235. யுரேனியம்-233, புளூடோனியம்-239 ஆகியவை தானகவே உடைவதில்லை. உறுதியற்ற ஐசோடோப்புகளான

யுரேனியம்-236, யுரேனியம் 234. புளூடோனியம்-240 போன்றவைகளை உடைகின்றன. இவை நியூட்ரான்களை எடுத்துக்கொள்வதன் மூலம் தோன்றுகின்றன அணுசாதன வெடிப்புக்குக் கலப்பற்ற யுரேனியம்-235, யுரேனியம்-233 அல்லது புளூடோனியம் 239 ஆகியவை தேவைப்படுகின்றன. இவற்றில் ஒரு மூலகத்தின் சிறு துண்டுகள் மற்றதினுள் பாய்ச்சப்படுகின்றன. இதிலிருந்து மிகப்பெரும் சக்தி ஒரு வினாடியில் பத்து லட்சத்தில் ஒரு பங்கிற்கும் குறைவான நேரத்தில் வெளிப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் மூலகத் துண்டுகள் பாயும் வேகம் மிக அதிகமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் தேவையான அடர்ந்தி உருவாகும் முன்னரே அது வெடித்துவிடக்கூடும். இந்தியா வெடித்துள்ள முதல அணு சாதனத்தின் சக்தி 15 கிலோ டன் அதாவது 15 000 டன் டி என் டிக்குச சமமாகும். இதற்குத் தேவைப்பட்ட புளூடோனியம் 15 கிலோ கிராமாகும்.

இயற்கையில் கிடைக்கும் யுரேனியத்தில் 0.7 சதம் யுரேனியம்-235 ம் 99-3 சதம் யுரேனியம்-239 ம் இருக்கின்றன யுரேனியம்-233 புளூடோனியம்-239 ஆகியவை இயற்கையில் கிடைப்பதில்லை. ஆனால் யுரேனியம்-238 இல் நியூட்ரான்களைப் பாய்ச்சினால் அது யுரேனியம் 239 ஆக மாறுகிறது. யுரேனியம்-239 ஒரு எலக்ட்ரானை இழந்து நெப்டுனியம்-239 (Np-239) ஆக மாறுகிறது. நெப்டுனியம்-239 மேலும் ஒரு எலக்ட்ரானை இழந்து புளூடோனியம்-239 ஆக மாறுகிறது. புளூடோனியம்-239 மிகவும் எச்சரிக்கையாகக் கையாள வேண்டிய மூலகம். இந்தியாவில் முதல்கட்ட அணு சக்தித்திட்டம் முடிவுறும்போது மூன்று டன்கள் புளூடோனியம் கிடைக்கும். இப்பொழுது இந்தியாவிடம் சுமார் 90 கிலோ கிராம் புளூடோனியம் இருக்கலாமென்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

தோரியம் 232 (Th-232) இல் நியூட்ரான்களைப் பாய்ச்சுவதன் மூலம் யுரேனியம்-233 ஐ உற்பத்தி செய்யலாம். தோரியம்-232 முதலில் தோரியம்-233 ஆகவும். பின்னர் ஒரு எலக்ட்ரானை இழந்து புரோடாக்டினியம்-233 (Pa-233) ஆகவும் மாறுகிறது புரோடாக்டினியம் மேலும் ஒரு எலக்ட்ரானை இழந்து இறுதியில் யுரேனியம்-233 ஆக மாறுகிறது. எனவே தோரியத்தை ரியாக்டரின் (Reactor) கம்பளமாக (blanket) உபயோகிக்கும் பொழுது உள்ளேயிருந்து தப்பிவரும் நியூட்ரான்கள் தோரியத்துடன் சேர்ந்து யுரேனியம்-33 கிடைக்கிறது. இம்மாதிரி ரியாக்டர்கள் இனப்பெருக்கி ரியாக்டர்கள (Breeder Reactors) எனப்படும்.

உலகத்தில் உள்ள மொத்தத் தோரிய அளவில் எல்பது சதத்தை இந்தியா பெற்றிருக்கிறது.

## ஆக்கப் பணிகளில் அணு சக்தி

தரைமட்டத்தில் வெடிக்கப்படும் அணுசாதனம் அதன் அடுத்த சக்தியால் ஆழம் அதிகமில்லாத பள்ளத்தைத் தோற்று விக்கிறது. இதில் பெரும்பகுதி சக்தி காற்று மண்டலத்துடன் கலந்து விடுகிறது. ஆகவே பெரும் பள்ளங்களைத் தோற்றுவிக்க தரைமட்டத்திற்கு அடியில் அணு சாதனம் வெடிக்கப்படுதல வேண்டும். வெடிச் சக்தி அது தோன்றும் இடத்திலிருந்து வில கிச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே வருமாதலால் மிகவும் அதிக ஆழத்தில் வெடிப்பது தரைமட்டத்தில் எந்த மாற்றத்தை யும் ஏற்படுத்தாது பயனின்றிப் போகிறது. எனவே அணு சாத னத்தின் வெடிச்சக்திக்கு ஏற்ப நிலப்பண்புகளைக் கருத்தில் கொண்டு ஆழம் நிர்ணயக்கப் படுகிறது.

தரைக்குக்கீழ் வெடிக்கப்படும் அணு சாதனத்திலிருந்து பெறும் சக்தி ஒரு விநாடியில் பத்து லட்சத்தில் ஒரு டங்கிற்கும் குறைவான நேரத்தில் வெளிப்படுகிறது. அப்போது அப்பகுதி யில் வெப்பம் ஒரு கோடி டிகிரி வரையிலும், அழுத்தம் பலலட்சம் மடங்குகளாகவும் பெருகுகின்றன. இதனால் அருகிலுள்ள பொருட் கள் உருகி ஆவியாக மாறுகின்றன.

அணுக் கதிர் வீச்சு (Radioactivity) என்பது அணுக்களின் மையங்களிலிருந்து சக்தி மிகுந்த துணுக்குகளும் கதிர்களும் ஒரே காலத்தில் வெளிப்பாய்ந்து செல்வதாகும். அணு சாதனங்கள் வெடிக்கப்படும்பொழுது உருவாகும் பல பொருட்கள் கதிர் வீசும் ஆற்றல் மிகக் கொண்டவை. இக்கதிர் வீச்சுக்கள் புற்றுநோய், மரபுவழி நோய்கள் முதலிய பல கதிர் வீச்சு இடர்களைத் (Radiation hazards) தோற்றுவிக்கின்றன. ஆகவே அணுச் சாதன வெடி களைக் கையாளும் பொழுது மிகுந்த முன்னெச்சரிக்கையும் பாது காப்பும் தேவைப்படுகின்றன.

தரைமட்டத்திற்கு அடியில் வெடிக்கப்படும் அணுச்சாதனங் களிலிருந்து வெளிப்படும் கதிர் வீச்சுப் பொருட்கள் பெரும் பாலும் தோன்றிய இடத்திற்கு அருகிலேயே தங்கி விடுகின்றன. ஆனால் தரையின் அடியில் உள்ள நீரோட்டத்தின் வழியே எடுத் துச் செல்லப்படக் கூடும் ஆனால் இதுபோல் நீரோட்டத்தி னூடே எடுத்துச் செல்லப்படும் வேகம் மிகக் குறைவாதலால்

# ஆனந்தூர்

சீ. இலட்சுமணன், சிங்கம்புணரி

## ஆனந்தூர்

ஆனந்தூர் என்ற ஆனாந்தூர் முகவை மாவட்டம் திருவாடானை வட்டத்தில் சிறிய கிராமமாக உள்ளது. அதனைச் சூழ்ந்துள்ள சுமார் முப்பது (30 கிராமங்களுக்கு தொடர்பு நிலையமாகவும் உள்ளது. தற்போது சிறு கிராமமாக இருப்பினும் சுற்றுப்புறக் கிராமங்களின் உதவியால் போக்குவரத்து வாணிகம் முதலியவற்றால் இன்றும் சுறுசுறுப்பாக காட்சியளிக்கிறது. இவ்வூர் மக்களில் பெரும்பான்மையோர் மலையாத் தொடர்புடைய முகமதியர்கள் சுற்றியுள்ள கிராமங்களில் இந்துக்களே மிகப்பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வூருக்கு அருகிலுள்ள துவார், சாத்தனூர், திருத்தேர்வளை, கோவிந்தமங்கலம் போன்ற இடங்களில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் நாயக்கர்காலக் கல்வெட்டுகளும் உள. இவ்வூரையும் இவ்வூரைச் சுற்றியுள்ள இடங்களையும்பற்றி தொல்லியலா ஆராய்வது நல்லது.

ஆனந்தூரில் பழமையான சிவன்கோயில் ஒன்று பழுதடைந்துள்ளது. ஆனால் வாரம் ஒருமுறை பூசை நடைபெற்று வருகிறது அக்கோயில் அம்பிகைக்கு தனிக்கோயில் பிற்காலத்தில் எடுக்கப்

---

அதிகதூரம் எடுத்துச் செல்லப்படுமுன்னரே அவை கதிர்வீச்சுத் தன்மையை இழந்து விடுகின்றன.

அணு சாதனங்களைப் பயனுள்ள பல துறைசளுக்குப் பயன்படுத்தலாம். வெள்ளக் காலங்களில் வெள்ளம் வீணாவதைத் தடுக்க பெரும் நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி தேவையானபோது நீரை உபயோகிக்கலாம். கடற்கரை ஓரங்களில் செயற்கைத் துறைமுகங்களை ஏற்படுத்தலாம். மலைகளினாடே சுரங்கப் பாதைகளை அமைக்கலாம் எண்ணெய் வளங்களைக் கண்டுபிடிக்கவும் தரைக்குக் கீழ் உள்ள உலோகங்களைப் பிரித்தெடுக்கவும் உபயோகிக்கலாம் அணு சக்தி பற்றிய அறிவியல் வளர வளர இன்னும் பல ஆக்கப் பணிகளில் அணுசக்தி பயன்படுத்தப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம். ஃ

பட்டுள்ளது. துர்க்கை, முருகன் திருவுருவங்கள் தனிக்கற்களில் புடைச்சிற்பங்களாக உள்ளன. இங்குள்ள மகரதோரண அமைப்பையும், துர்க்கை, முருகன் திருவுருவ அமைப்பையும் நோக்கும் போது இது முற்கால பாண்டியர் காலத்ததாக இருக்கலாம் என கருதப்படுகிறது. ஆலயத்தின் உள்ளே இருந்த கல்வெட்டுகள் பிற்காலத்தில சிதைக்கப் பட்டுள்ளன என்பதற்கான அறிகுறிகளும் உள

இக்கோவிலின் நுழைவாயிலின் இடப்புறம் ஒன்றும் வலப்புறம் ஒன்றுமாக இரு கல்வெட்டுகள் உள. இடப்புறம் உள்ள கல்வெட்டு பலவிடங்களில் சிதைந்துள்ளது. இது கோச்சடையபன்மரான பராக்கிரம பாண்டியனின் 8-வது ஆண்டு கல்வெட்டாகும். இது பிற்காலத்தில் வாழ்ந்த பராக்கிரம பாண்டியன் காலத்ததாக இருக்கலாம்.

வலப்புறம் உள்ள கல்வெட்டு சகம் 1443 (AD. 1521)-இல் அளகாபுரியான செழிய நாராயணபுரத்து[1] வியாபாரி ஏகப்பெருமாளுடையது அக்கோவிலில் அழகிய பிள்ளையாரை நவப்பிரதிட்டை (புதிதாக எழுந்தருளிவித்தல்) செய்துள்ளமையைக் குறிக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளும் இவ்வூரை ஆறுந்தூர் என்று குறிப்பிடுகின்றன.[2] இச்சுற்று வட்டார மக்களும் ஆறுந்தூர் என்றே வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரின் பழைய கல்வெட்டு இறைவனை திருமதிச்சடை ஈசுவரர் எனக் குறிக்கிறது. ஆனல் தற்போது திருமேனிநாதர் என்று அழைக்கப்படுகிறர். இவ்வூர் அவிநயசுந்தர நல்லூர் என்றும் அழைக்கப்பட்டது.[2] இவ்வூரில் வழிபாட்டிலுள்ள ஐயனர்சிலேயும் குறிப்பிடத்தக்க சிற்ப அமைதியுடையது. நரசிம்மர்சிலே ஒன்றும் இவ்வூர் குளத்தில் பிடாரி கோவில்முன்பு கிடக்கின்றது.

ஆனந்தூர் மருதுபாண்டியருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த சண்டையிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது. விசவனூர் ஆற்றில் கும்பினி கையாளாக விளங்கிய சிவகங்கை மன்னருக்கும் மருதிருவருக்கும் பெரும்போர் நடந்தது. இதை சிவகங்கைக் கும்மி அம்மானை குறிப்பிடுகின்றது.[3]

---

1. பிரான்மலைக் கல்வெட்டு (1440-1903) இவ்வூரைக் குறிக்கின்றது.
2. பிரான்மலையிலுள்ள சிதைந்த கல்வெட்டு ஒன்றிலிருந்து "ப கூற்றத்து ஆறுந்தூரான அவிநயசு" என்ற வரிகளை Dr S. ஜெயபாரதி M B. B. S. அவர்கள் எழுதிக் கொடுத்தார்கள்.
3. சிவகங்கை சரித்திரக் கும்மி-பக்-40.

## துவார்

ஆனந்தூருக்கு மேற்கே சுமார் ஒருமைல் தூரத்தில் உளது அவ்வூர் குளத்தின் கரையில் நாயக்கர்கால அழகிய திருமால் சிலை ஒன்றுள்ளது. அதனை மக்கள் வழிபட்டு வருகின்றனர். திருமலை நாயக்கர்கால சர்வமானியக்கல் ஒன்றுளது.[4] திருமலை நாயக்கரய்யனவர்கட்கு கொண்ட அஞ்சுகோட்டை--கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலே போகவும் என்ற வரிகளைத்தவிர ஏனையவை சிதைந்து விட்டன.

## சாத்தனூர்

ஆனந்தூருக்கு மேற்கே சுமார் இரண்டுமைல் தூரத்தில் உள்ளது. சிதைந்த அம்மன் சிலை கலையழகு நிரம்பியது. எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரபாண்டியன் 31-ஆம் ஆண்டு (AD 1301)[5] கல்வெட்டொன்று முத்தூர் கூற்றத்து கருப்பூருடையான் நாயன் கருமாணிக்கனுக்கு முப்பது வட்ட சிவப்பிராமணர்கள் பிடிபாடுபண்ணிக் கொடுத்த விவரம் கூறுகிறது. கோவிலின் நுழைவாயிலின் நிலையின் மேலுள்ள கல்வெட்டு சிதைந்த நிலையிலுள்ளது. அதிலிருந்து வீரபாண்டியன் காலத்தில்[6] பழையனூர் நாடாழ்வார்களாக அரையர்களின் பக்கல்காரர்களான அஞ்சுகோட்டை நாடாழ்வார் தேவி மங்கையற்கரசியார் திருப்படிமாற்றுக்கு ஏற்பாடு செய்துள்ளதை அறியமுடிகிறது.

## திருத்தேர்விளை

ஆனந்தூருக்குக் கிழக்கே சுமார் 5 மைல் தூரத்தில் உளது. இரண்டு வட்டெழுத்து கல்வெட்டுகள் உள. சிதைந்திருப்பதால் படிக்கமுடியா நிலைமையிலுள. பிற்காலத்து[7] வீரபாண்டிய, சுந்தரபாண்டியத் தேவர்கள் கல்வெட்டுகள் மூன்று உள. இவை திரு. நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்ட விவரங்களைக் குறிக்கின்றன.

---

சிவகங்கை அம்மானை-பக் 171-173.

4. இது என்னால் பார்த்து எழுதப்பட்டது.

5, 6, 7 இந்தக்கல்வெட்டுகள் என்னால் பார்த்து எழுதப்பட்டவை

# நடுகல் வழிபாடு

புலவர் செ. இராசு

## நடுகல் பற்றிய ஆய்வு

தமிழ்க் கல்வெட்டுக்களாக சுமார் ஒருலட்சம் கல்வெட்டுக்கள் நாட்டில் இருக்கின்றன. அவைகளில் படி எடுத்திருப்பவை ஏறத்தாழ 25,000 கல்வெட்டுக்கள்தாம். அச்சாகி வெளிவந்திருப்பன சுமார் 5.000 தாம். ஆனால் அவைகளில் சில நூறுதான் நடுகற்கள் பற்றிய கல்வெட்டுக்கள் இருக்கும்.[1]

பெரும்பாலும் கோயில் கல்வெட்டுக்களே முன்பு படி எடுக்கப்பட்டன காடு மேடுகளிலும், மலைச்சாரல்களிலும், புதர்களிடையிலும் மறைந்து கிடக்கும் நடுகற்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இன்று நடுகற்களைக் காணவேண்டும் என்ற ஆர்வம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

1971- ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட நடுகற்களைத் தமிழக அரசின் தொல்லியல் துறை கண்டுபிடித்துப் படி எடுத்து ஆய்ந்து வருகின்றது.[2] 1973- பிப்ரவரி மாதம் இத்துறையினர் நடுகற்களைப் பற்றிய ஒரு கருத்தரங்கினையும் பொருட் காட்சியினையும் நடத்தினர்.

தனியாக நடுகற்களைக் கண்டு ஆய்ந்து வருபவரில் தருமபுரி மாவட்டம் கடத்தூர்ப் புலவர் புது. போ. வேங்கடராமன் அவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.[3] அரும்பொருட் காட்சி சாலைகளில் நடுகற்களுக்கென்றே தனிப்பகுதி அமைத்துத் தொகுத்து ஆய்வு நடத்த வேண்டும் என்ற எண்ணமும் நடுகற்களை ஆராயும் ஆர்வமும் பெருகி வரும் இப்பொழுது அதுபற்றிய சில குறிப்புகளைத்தான் இக்கட்டுரை சிந்திக்கிறது.

---

1. கல்வெட்டுக் கருத்தரங்கு [1968] முன்னுரை
2 செங்கம் நடுகற்கள் [1972] முன்னுரை
3. ஆய்வுத்தேன்-பக்-58

## பெயர் பொருந்துமா ?

பாராட்டத்தக்க நல்ல பண்புகளைப்பெற்ற ஒருவர் இறந்தபின் அவர் நினைவாக நடும் கல்லை "நடுகல்" என்று முன்னோர் வழங்கினர்.

> "பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
> மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
> அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
> இனிநட் டனரே கல்லும்"[4]

என்பது உறையூர் இளம்பொன் வாணிகனார் கூற்று 'நட்டகல் நடுகல்-- என்பது நல்ல சொல்லே. ஆனால் பிற்காலத்தில் கோபுரங்களிலும். தூண்களிலும், மலைச்சாரலிலும் குகைகளிலும் பொறித்த சிற்பங்களை எவ்வாறு 'நடுகல்' என்பது?

நடுகல் என்பதனை ஆங்கிலத்தில் Hero Stone என்றே பலரும் குறிக்கின்றனர்.[5] போரில் வீரமரனம் எய்திய வீரர்க்கு மட்டும் கல் நடுவதில்லை. கடவுள் கோயில் கட்டியவருக்கும்.[6] கால்வாய் வெட்டியவருக்கும்,[7] வடக்கிருந்து உயிர் விட்டவருக்கும்,[8] சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்த சமணச் சான்றோருக்கும்,[9] பெண்டிருக்கும்,[10] நற்காரியத்தின் பொருட்டுத் தற்கொலை செய்து கொண்டவர்களுக்கும்.[11] நரபலியாக வெட்டுண்டவருக்கும்,[12] உடன்கட்டை ஏறிய உத்தம மாதர்களுக்கும்,[13] நினைவுக் கற்கள் இருக்கின்றன.

எனவே 'நடுகல்' 'வீரக்கல்' என்று இவைகளை அழைப்பதை விடுத்து (கற்களின் வகையும் தொகையும் பல்கிய காரணத்தால்) 'நினைவுக்கல்' என்று அழைக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆராய்ச்சிச் சான்றோர்கள் இது குறித்து ஆய்வார்களாக.

---

4. புறநானூறு-264
5 சாசன இலாகா அறிக்கை 1950
6. கெட்டி முதலியார்--தாரமங்கலம்
7. காலிங்கராயன்–இணைமுகப்பு
8. கோப்பெருஞ்சோழன்-புறம் 221
9. சந்திரநந்தி-திருநாதர் குன்று
10. புளியம்மை-சாசன இலாகா அறிக்கை 597/1905(புள்ளப்பை)
11. அப்பாவையங்கார்-திருவரங்கம் (87/1937)
12. பாலகுமரன்–சென்னிமலை
13. செந்தமிழ 3 (து. அ. கோபிநாதராவ் கட்டுரை)

**தொல்காப்பியர் குறிப்பு :**

நடுகல் நாட்டிக் கோயில் கட்டும் முறையைத் தொல்காப்பியர் மிகத்தெளிவாக முறைப்படுத்திக் கூறுகின்றார்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்" [14]

என்ற பகுதியில் இது விளங்கும் தொல்காப்பியர் காலம் கி.மு 5-ஆம் நூற்றாண்டென்பது அறிஞர் துணிபு.[15] தொல்காப்பியர் இலக்கியங்கண்டு இலக்கணம் இயம்புகின்றார். ஆயின் நடுகல் நாட்டும் மரபு எத்துணை தொன்மையுடையது என்பது இதனால் புலப்படும். தொல்காப்பியர் நடுகல்லில் கூறும் எழுத்திருந்ததா என்பது ஆய்வுக்குரியது.

**சங்ககால நடுகல்!**

நீண்டு உயர்ந்த பெரிய கற்களையே (நெடுநிலை நடுகல்) நடுகல்லாக நட்டனர். அவை பார்ப்பதற்கு யானைபோன்று காட்சியளிக்கும். அதன் நிழலில் மக்கள் தங்குவர். முன்னர் கேடயம் வேல், ஊன்றப்பட்டிருக்கும். கல்லில் வீரனது பெருமைகளையும் பெயரையும் பொறித்திருப்பர். மயில் பீலி சாத்தும் வழக்கமும் உண்டு [16]

நாள்தோறும் அதிகாலையில் நீராட்டி வாசனைப் புகையைக் காட்டி நெய் விளக்கு ஏற்றுவார்கள். கரந்தைப் பூவையும் பனை ஓலையில் தொடுக்கப்பட்ட வேங்கைப் பூவையும், மரல் பூவைப் பிளந்த செம்மையான கண்ணியையும்சூட்டி மகிழ்வர். நெல்லோடு பூவைக் கலந்து தூவி வழிபடுவர். ஆட்டுக் கிடாய்களை வெட்டிப் பலிதருவர். கள்ளைச் சிறுகலங்களில் ஊற்றிப் படைப்பார்கள்.[17]

முன்னோர் கற்களை பெண்களும், பிறரும் வணங்குவர். கணவனின் கல்லை கைம்மை நோன்புடைய மனைவி வணங்குவாள். வழிச்செல்வோர், நடுகல்லை வழிபடுவர். மழைபெய்து குளிர்ச்சியாகி வழிச்செலவிற்கு இன்பம் தரும் என்று நம்பினர். நடுகல்லை

14. தொல்பொருள் 60
15. இலக்கண வரலாறு (தொல்காப்பியம்)
16. அகநானூறு :89, 53, 131, 67, ஐங்குறுநூறு 252
17. புறநானூறு 239. 261, 265, 264, 335, 232

விட வேறு சிறந்த தெய்வமில்லை என்பது மக்கள் துணிபு.[18] கல் நாட்டுவது வேந்தர்க்கும் வீரர்க்கும் பொதுவாக இருந்தது.[19] போரில் புண்பட்ட வீரர்கள் நடுகல்லிடத்து வந்து புண்ணைக் கிழித்துக் கொண்டு இறந்து படுவதும் உண்டு.[20]

**அகநானூற்றுக் குறிப்பு :**

இரண்டு அகநானூற்றுப் பாடல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. சங்க காலத்து விளங்கிய தொன்மையான நடுகற்களை அவை படம் பிடித்து நமக்குக் காட்டுகின்றன.

ஒரு நடுகல்லில் எழுத்து இருந்தது. வீரர்கள் தங்கள் அம்புகளை அதில் தேய்த்துக் கூர்மையாக்கினர். எழுத்துக்கள் அழிந்தன. கல்லும் தேய்ந்தது. வழிச்செல்வோர் அவ்வெழுத்துக்களைப் படிக்க முடியவில்லை. உள்ள எழுத்து வேறாகக் காட்சி அளிக்கிறது.

கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்''[21]

இன்னொரு சிற்றூரில் நடுகற்கள் பல இருந்தன. அதரிடை நட்டது அல்லவா? அங்கு உப்பு வணிகரின் வண்டிகள் வருகின்றன. அவற்றின் சக்கரங்கள் பட்டு எழுத்துக்கள் அழிந்தன. இங்கும் அதே காட்சி

''மரங்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைந்த வன்தலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணு மருங்குல்
கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்
கண்பொரி கவலைய கானம்''[22]

அம்புகளைத் தேய்க்கும் அளவிற்குப் பழமையானதாகவும், வண்டி

---

18. புறநானூறு 206, 261, 263, 335
19. சேதுப்பிள்ளை பாராட்டுவிழா மலர் பக் 275
20. பெருந்தொகை 701
21. அகநானூறு 297
22. அகநானூறு 343

செல் வழியைத் தடுக்கும் அளவிற்கு மிகுதியானதாகவும் கடுகற்கள் இருந்தவை இதனுல் புலப்படுகிறது.

**பாலேயில்தான் இருந்ததா ?**

கடுகற்கள் பெரும்பாலும் சிற்றூர்களின் சிறு வழியில், இடு காட்டில் நெல்லிமர நிழலில், கல் சூழ்ந்த பதுக்கையிடங்களில் இருந்தன என்று கூறப்பட்டாலும் இன்று கிடைக்கும் (சங்கப் பாடல்களின்) குறிப்புக்கள் மூலம் அவை பெரும்பாலும் பாலே நிலத்தில்தான் இருந்தனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. கடுகற்கள் உள்ள இடங்களே "வெஞ்சுரம், அருஞ்சுரம், அருபுனே, சிறுவழி, அரிதுண் கூவல் அங்குடிச் சீறூர், வன்புலச் சீறூர், போக்கறு கவலேய புலவுநாறு அரும்சுரம், இடம்பிறர் கொள்ளாச் சிறுவழி" என்று சங்க இலக்கியப் பாடல்கள்[23] கூறுகின்றன. பெருங்கதை போன்ற பிற்கால இலக்கியங்களும் இதனேயே கூறுகின்றன.[24]

கடுகற்களேக் குறிக்கும் இடங்களின் வருணனே ஏன் பெரும் பாலும் பாலேநிலமாகக் கூறப்படுகிறது என்பதை அறிஞர்கள் ஆய்வார்களாக!

(தொடரும்)

---

23. ஐங்குறுநூறு 252, அகம் 35, 53, புறம் 253, 260
24. பெருங்கதை 1-46-272


# தென்மொழி

## தலேநகரம் வந்துவிட்டது

பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களே ஆசிரியராகக் கொண்ட தென்மொழி சென்னே வந்து விட்டது. அத்துடன் சிறுவரிதழான தமிழ்ச்சிட்டும் உடன் வந்துவிட்டது.

முகவரி :

51, அருணுசல ஆசாரித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னே-600005.

தொல்லியல்

# தக்கயாகப் பரணி

இரா. நாகசாமி எம். ஏ.

விக்ரமசோழன், குலோத்துங்கன், இராஜராஜன் ஆகிய மூன்று பெரும் சோழ மன்னர்களைப் பற்றியும் அழகிய உலாக்கள் பாடிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றியது தக்கயாகப் பரணி என்பது அனைவரும் அறிந்ததாகும். ஒட்டக்கூத்தருக்கு சுமார் 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயங்கொண்டார் குலோத்துங்கன் மீது கலிங்கத்துப்பரணி பாடியுள்ளார். கலிங்கத்துப்பரணி ஒரு அரசனின் புகழ்பாட எழுதப்பட்ட நூல். தக்கயாகப்பரணி சிவபெருமானின் ஏவலால் வீரபத்திரக் கடவுள் தருக்கோடு தக்ஷன் புரிந்த யாகத்தை அழித்த புராணக் கதையைப் பாடுவதற்கு எழுதப்பட்ட நூல்போலத் தோற்றம் அளிக்கிறது. ஆனால் உண்மையில் இந்நூலை ஆழ்ந்து படிக்கும்போது இரண்டாம் இராஜராஜ சோழனையும், அவனால் தோற்றுவிக்கப் பட்ட தாராசுரத்திலே இருக்கிற இராஜராஜேச்சுரம் உடையாரையும் சிறப்பிக்க எழுதிய நூல் இது என்று அறியலாம்

எல்லாவற்றிற்கும் தலைவனாகிய இராஜராஜபுரத்து ஈசர் இருக்க அவரைப் புறக்கணித்துவிட்டு தக்கன் யாகம்செய்யத் தொடங்கினான் என்று தக்கயாகத்தை ஒட்டக்கூத்தர் தொடங்குகிறார்.

"எல்லைநாயகன் ராஜராஜபுரேசர் ஈசர் இதற்கெனும்
தொல்லை நான்மறை நிற்க கேள்வி வேள்வி தொடங்கியே"

வேள்வி அழிக்கப்பட்ட பிறகு அமரர்கள் எல்லாம் பேய்களாகக் கிடப்பதை இறைவிக்குக் காட்ட இறைவன் களத்திற்கு வருகிறான். அவன் இராஜராஜபுரீசன் என்று கூத்தன் பாடுகிறான்.

ஒருமருங்குடைய உலகநாயகியொடு
ஒற்றை வெள்ளையிடை ஊர்திமேல்
இருமருங்கும்மறை தொழஎழுந்தருளி
ராஜராஜபுரி ஈசரே"

என்று இச்செய்யுள் வருகிறது. இதிலிருந்து தொடக்கத்தி லிருந்து இறுதிவரையில் தக்கனைத் தண்டித்து அருள்புரிந்த இறைவனாகப் படைக்கப்பட்டுள்ளவர் தாராசுரம் கோயிலில் உறைகின்ற இராஜராஜேச்சுரம் உடையார் என்பது தெளிவு. இராஜராஜேச்சுரம் என்பதே இப்பொழுது தாராசுரம் என்று



தாராசுரம் வீரபத்ரன்

மருவி வழங்குகிறது. இந்நகருக்கும் இராஜராஜபுரம் என்று பெயர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன தாராசுரம் கும்பகோணத்தில் இருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது.

தக்கயாகப் பரணியில் காளிக்கு கூழிட்டுப் பேய்கள் வாழ்த்துகின்றன. அவை காளியையோ முக்கண் இறைவனையோ அல்லது தக்கன் யக்ஞம் தகர்த்த வீரபத்திரக் கடவுளையோ வாழ்த்தவில்லை. தாராசுரத்தில் இராஜராஜேச்சுரம் அமைத்த இரண்டாம் இராஜராஜனை வாழ்த்தின.

"தாராசு அண்டம் தொடுத்தணிந்தார்
 தமக்கிடம் போதத் தமனியத்தால்
சிராச ராசிச்சரஞ் சமைத்த
 தெய்வப் பெருமானை வாழ்த்தினவே"

ஆக, இந்தக் காப்பியத்தின் தலைவன் இராஜராஜபுர ஈசன் (தாராசுரம் கோயிலில் உறைகின்ற பரம்பொருள்). அவ்விறைவனைப் போற்றும் முகத்தால் அவ்விறைவனுக்குப பெருங்கோயில எழுப்பித்த இரண்டாம் இராஜராஜ சோழனையும் இந்நூலில் புகழ்கிருர் ஒட்டக்கூத்தர். ஒரு அரசனின் போர் வெற்றியைப் புகழ்ந்து அவனது பெருமையைப் பாடியது கலிங்கத்துப்பரணி தக்கயாகப்பரணியும் அரசனின் சிறப்பைப பாடுகின்ற நூல்தான் ஆயினும், தெய்வத்தின் சிறப்பைப்பாடி அதற்கு அங்கமாக அரசனின் புகழை அமைத்துள்ளது. ஆதலின் இதை தெய்வப்பரணி என்று அழைக்கலாம். அந்த அமைப்பில் கலிங்கத்துப் பரணியிலிருந்து மாறுபட்டது தக்கயாகப்பரணி. தனக்கென ஒரு தனி வழி வகுத்துக்கொண்டு ஒப்பற்ற காப்பியமாக கலிங்கத்துப் பரணியை ஜெயங்கொண்டார் படைத்த பிறகு. அதே முறையில் அரசனைப் புகழ்வதைக் காட்டிலும், ஒரு புதிய முறையில் பரணியை அமைத்துப் புகழ் கொண்டுள்ளார் ஒட்டக்கூத்தர்.

ஜெயங்கொண்டார் வரலாற்றை மையமாகக் கொண்டு நூல் இயற்றியது போலவே, ஒட்டக்கூத்தரும் வரலாற்றின் அடிப்படையிலேயே முழுவதும் எழுதப்பட்ட மூன்று உலாக்களைப் படைத்து அதிலும் ஒரு புதுமையைக் கண்டுள்ளார். அவரது உலாக்களுக்கு ஈடாக, வேறு உலாக்களைக் கூற இயலாது

தக்கயாகப் பரணியில் கடைதிறப்பு என்னும் பகுதியில் பெண்கள் கதவுகளைத் திறவுங்கள் என்று கூறுவதாகப் படைப்பது இலக்கிய மரபு. அந்த வகையில் இராஜராஜபுரத்தில் உள்ள

பெண்களைக் கதவு திறக்குமாறு கூத்தர் பல பாடல்கள் பாடியுள் ளார். இதிலிருந்து ராஜராஜபுரத்திற்கு அவர் எவ்வளவு சிறப்பு அளித்திருக்கிறார் என்று அறியலாம்.

தாராசுரம் கோயிலில் மற்றொரு சிறப்பும் உண்டு. ஒரு கோட்டத்தில் தக்கனது யாகம் தகர்த்த சீற்றம் முழுவதும் கல் லிலே காட்டும் வீரபத்ரக் கடவுளின் தோற்றம் உள்ளது. அச் சிற்பம் மிகவும் சிறப்பாகத் தகும் வகையில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்குக் காலத்தால் முன்னர் கட்டப்பட்ட தஞ்சை இராஜராஜேச்சுரத்திலோ, கங்கை கொண்ட சோழீச்சுரத்திலோ வீரபத்திரர் உருவம் இவ்வளவு சிறப்பாக இடம்பெறவில்லை. தாராசுரத்தில் மட்டும் வீரபத்திரக் கடவுளுக்கு உள்ள சிறப்பை நோக்கும்போது, இவ்வுருவத்தை மனத்தில் இருத்திக் கொண்டு தான் வீரபத்திரக் கடவுளின் வீரச் செயல்களைப் பாடும் தக்க யாகப் பரணியைக் கூத்தர் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தக்கயாகப் பரணியில் மற்றொரு சிறப்பும் உண்டு. தக்க யாகத்தோடு தொடர்பில்லாத திருஞானசம்பந்தர் வரலாறு இந் நூலில் இடம்பெற்றுள்ளது. அவர் சமணரோடு வாதிட்டதும் பாண்டிய மன்னனின் பிணி தீர்த்ததும் இந்நூலில் இடம் பெற் றது ஏன் என்று சிலர் வியப்படையலாம்! தாராசுரம் கோயிலின் திருச்சுவற்றில், தேவாரம் பாடுகின்ற ஐம்பதுக்கும்மேற்பட்டவர் களுடைய உருவச் சிலைகளும், அவர்களுடைய பெயர்களும் உள் ளன. இதிலிருந்து தேவாரப் பதிகங்கள், தாராசுரம் கோயிலில் மிகச் சிறந்த இடம் பெற்றிருந்தன என்பது தெளிவு. அவற்றைப் பாடியவர்களில் முதல்வராகக் குறிக்கப்படும் ஞானசம்பந்தரின் வரலாறு தாராசுரம் கோயில் இறைவனைப் பாட வந்த நூலில் இடம் பெற்றதில் வியப்பில்லை.

சோழப் பெருங்கோயில்களான தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கும், கங்கைகொண்ட சோழீச்சுரத்திற்கும் கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாக்கள் உண்டு. ஆனால் அவற்றை மையமாகக் கொண்டெழுதப்பட்ட முழு நூல்கள் ஏதும் இது காறும் கிடைக்கவில்லை. தாராசுரம் கோயிலைப் பற்றிய முழு நூலாகத் தக்கயாகப் பரணி கிடைத்திருப்பது தமிழகத்தின் நற் பேறு என்றே கருதலாம். தஞ்சையில் இராஜராஜேச்சுரம் என்று ஒரு நாடகம் நடிக்கப்பட்டதாக கல்வெட்டுகளில் இருந்து அறி கிறோம். அது இராஜராஜனின் புகழையும், அவன் தோற்று வித்த கோயிலையும், அதில் இனிது உறைகின்ற இராஜராஜேச்

# வாசகர் நோக்கு

கொங்கு சூன் இதழ் கலவை 25 பற்றிய என்னுடைய கருத்தை எழுத விழைகிறேன்.

முகவை என்ற பெயர் வாய்த்தமைக்குக் கூறப்பட்டுள்ள காரணம் அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை. தாங்களும் ஐயப் பொருளிலேயே குறித்துள்ளீர்கள்.

பிற ஆறுகளுக்கு இல்லாத பெருமை வையைக்கு உண்டு. ஆறுகளெல்லாம் தம் ஆராக் காதலனாகிய கடல் தலைவனோடு இறுதியிலே கலப்பன ஆயின் வையை கடலோடு கலப்பதில்லை. இராமநாதபுரம் பெரிய கண்மாயுள் புகுவதோடு அமைந்து விடுகிறது.

கண்மாய் நிரம்பினால் மிகுநீர் மறுகால் துறை வழியே (கலிங்கு) வெளிச்செல்கிறது. அந்நீர் வேண்டுமானால் கடலிலே கலக்க வாய்ப்புளது. என் கருத்தைப் பின்வரும் பாடல் அரண் செய்கிறது. கடலில் வையை கலக்காததை மிக அழகாகத் தெரிவிக்கிறது.

> 'நாரியிட பாகற்கு' நஞ்சளித்த பாவியென்று
> வாரியிடம் சேராத வையையே'

எனவே வையையாறு கடலோடு கலக்குமிடத்தில் – முகத்துவாரத்தில் அமைந்ததால் இராமநாதபுரத்திற்கு 'முகவாய்' எனப் பெயரமைந்து 'முகவை' என மருவிற்று. மேலும் இராமநாதபுரத்திற்குத் 'தேவை நகர்' என்னும் பெயருண்டு. 'ஒருதுறைக் கோவை'யில் இப்பெயர் ஆளப்படுகிறது.

---

சுரத்து இறைவனையும் போற்றி, நாடகமாக நடிக்க இயற்றப்பட்ட நூலாக இருக்க வேண்டும். ஆனால் அது இதுகாறும் நமக்குக் கிட்டவில்லை. ஆயினும் தக்கயாகப் பரணியைப் பார்க்கும்போது ராஜராஜேச்சுர நாடகம் போலவே தாராசுரம் கோயிலில் இது கூத்தாகப் படைக்கப்பட்டதோ என எண்ணம் தோன்றுகிறது. தாராசுரம் கோயிலைக் கட்டும் பொழுதும், கட்டி முடித்த பொழுதும் அதிலே வழிபாட்டினையும், திருவிழாக்களையும் இசையையும் கூத்தையும் ஏற்படுத்திய போதும் உடனிருந்து கண்டு களித்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தனால் இந்நூல் இயற்றப் பெற்றது என்று எண்ணும்போது உள்ளம் பூரிக்கிறோம்.

# புள்

—முத்து. எத்திராசன்

இனி குயிலும் பூந்தாதுக்களைக் கோதும் என்பதனை,

'மின்னின் றூவி இருங்குயில் பொன்னின்
நறுந்தாது கொழுதும்' — (குறுந் 192)

என்று எடுத்துக் காட்டுவதாலும்

'பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி' — (குறுந் 320)
'இருஅல் புள்ளிற்றுக் கசிந்த தீந்தேன்' — (நற்றிணை 168)

என்பவற்றில் காணப்படும் 'புள்' என்னும் தேனுண்ணும் பறவை தேன்சிட்டையோ குயிலைக் குறிக்காது பொதுவாகக் கூறுதலானும் ஏதேனும் ஒன்ருக இருக்கலாம் என்று எண்ணிக் கொள்ளலாம்.

'வறிஞிமி ருர்க்கும் வாய்புகு கடாஅத்தும்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றெருத்தல் — (அகம் 78)
'மிஞிறு மூசுகவுள சிறுகண் யானை' — (அகம் 159
'மிஞிருர் கடா அங்கரந்து விடு கவுள்' — (அகம் 207)
'அண்ணன் மழகளி றரிஞிமி றோப்புங்
கன்று புணர் பிடிய குன்று' — (பதிற்று 12)

மேலே காட்டப்பட்ட மேற்கோள்களில் வரும் மிஞிறு அல்லது ஞிமிறு யானையின் மதநீரை உண்ணும் என்று கூறப்படுகிறது தேனை உண்ணப்படும் ஈயினைத் தேனீ என்று அழைப்பது உலக வழக்கு. தேனைத் தவிர மற்றவற்றையும் உண்ணும் ஈக்களும் உள என்பது நமக்குத் தெரிந்ததே. ஆகவே தேனல்லாதவற்றை உண்ணும் ஈக்களை மிஞிறு அல்லது ஞிமிறு என்று சங்ககால சான்றோர்கள் அழைத்தனர் என்று அறிகிறோம். ஆகவே மிஞிறு என்பது இல்லந்தோறும் மொய்க்கும் ஈயைக் குறிப்பிடுவனவே என்று சொன்னால் என்ன தவருகும்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1 | வண்டு | ... | ஆண் ஈ (வண்டு) |
| 2. | சுரும்பு | ... | பெண் ஈ (வண்டு) |
| 3. | தும்பி | ... | கருவண்டு |
| 4. | அஞ்சிறைத்தும்பி | ... | பட்டாம்பூச்சி (வண்ணத்துப்பூச்சி) |
| 5. | தேனீ | ... | தேனீ |
| 6 | சிதர் | ... | சிறிய தேனீ |
| 7. | பிரசம் | ... | கொம்பு தேனீ |
| 8. | தாதுண்பறவை | ... | தேன்சிட்டு |
| 9. | குறிஞ்சிப்பறவை | ... | சிறிய தேன்சிட்டு |
| 10 | புள் | ... | குயில் போன்றவைகள் |
| 11. | மிஞிறு (ஞிமிறு) | ... | ஈ (வீட்டு ஈ) |

---

# 2500 ஆண்டுகளுக்கு முந்தின தொன்னகரம்

வடகாம்-மாதவபூர் என்ற இடத்தில் தொன்மையான நகரமொன்றை கர்நாடகப் பல்கலைக் கழக வரலாற்று, கன்னட ஆராய்ச்சித் துறைகள் கண்டு பிடித்துள்ளன. இது 2500 ஆண்டுகளுக்கு முந்தின நகரம், 2 58 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது.

கர்நாடகப் பல்கலைக் கழகத்துறை 1972-ல் இந்நகரமிருக்குமிடத்தைத் தோண்டத் தொடங்கியது. செங்கல் கட்டிடங்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இவற்றில் பல வீடுகளாகும் ஒவ்வொரு வீட்டிலும் நிலவறை, கிணறு, கழிவு நீரை ஈர்க்கும் குழி காணப்பட்டது,

செங்கற்கள் நீளம், அகலம், கனம் மிக்கவை. சுவர்களுக்கு மண் சாந்து பூசப்பட்டிருந்தது. சில சுண்ணச் சாந்திலும் கட்டப்பட்டிருந்தன மண்பாண்டங்கள் அழகிய வண்ணங்களுடன் கவர்ச்சியாக உள்ளன.

தந்தத்தில் கடைந்தெடுத்த மகாலட்சுமி சிலை வடிவழகு மிகுந்தது. பலவெள்ளி முலாம் பூசிய தாமிரக் காசுகள், சதவாகன மன்னர்கள் கால ஈயக்காசுகள் கிடைத்துள்ளன.

26. செந்தமிழ்ச் செல்வி, ஏப்பிரல் (1974) இதழில் பாப்பரணை என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி உள்ளது. அக் கட்டுரையாசிரியர் அரணை என்ற ஓர் ஊருயிரி (Reptile) யின் குட்டியைத் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் பாப்பரணை என்பரென்றும், பாப்பரணை என்ற சொல் பார்ப்பன அரணை என்ற பெயரிலிருந்து மாறியிருப்பதாகவும் எழுதியுள்ளார்.

அச்சொல்லாய்வு, ஒப்பும் தரத்ததன்று. பார்ப்பு + அரணை என்பதே, கால ஓட்டத்தில் பார்ப்பரணை யாயிற்று. பார்ப்பு என்ற சொல் பாப்பு ஆகல் இயல்பே

பார்ப்பு என்பது இளமைப் பெயரே
அவற்றுட்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை (தொல். மரபு 4)
'தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன' (தொல். மரபு. 5)

மேற்குறித்த நூற்பாவிலிருந்து, தவழுகின்ற உயிரிகளின் இளமைக்கும் பார்ப்பு என்ற சொல் பொருந்தும் என்பது தெளிவாகிறது.

மேலும், இலக்கியங்களிலும் ஊர்பவைகளின் இளமை பார்ப்பு என்றே வழங்கப் பெறுகிறது. காட்டாக

"ஈற்று யாமைதன் பார்ப்பு ஓம்பவும்" (பொருநாற்று-186)
"யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே" (குறுந்-152)

என்பனவற்றைக் கொள்ளலாம். எனவே, மேற்குறித்தனவற்றிலிருந்து, பார்ப்பு அரணையே பார்ப்பரணையாயிற்று என்பது தெளிவாம்.

அட்டைப்படம்

பூம்புகார்-பல்லனீச்சுரம்-அன்னை சிவகாமி

நன்றி: இந்தியவியலுக்கான பிரெஞ்சுக் கழகம், புதுச்சேரி.

# பொங்கி மகிழ்ந்திட

உணவு உற்பத்தியில் தன்னிறைவு !

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க இளைஞர் அணி !

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் !

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள் !

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நீங்கிட
கைரிக்ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷாக்கள் !

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில

இதே போல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள் !
நிறைவாக வருவாய் பெறுகிறீர்கள் !

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்
தொல்லைக்கு ஆட்படுகின்றன !

காரணம் என்ன ?

நாளுக்கு நாள் பெருகிடும்
மக்கள் தொகையே இதற்குக் காரணம் !

எனவே !

செழித்திடும் நன்மைகளை
நாட்டில் நிலைத்திடச் செய்ய
நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட
அமையுங்கள் அளவான குடும்பம் !

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.

போன் : 431200 432926 431157 431650


உங்கள் தேய்ந்த டயர்களுக்கு
ARC புத்துயிர் அளிக்கிறது.




ஸ்கூட்டர் டயர் முதல் டிராக்டர் டயர் வரை எதுவாயிருந்தாலும், எங்கள் தொழிற்சாலையிலுள்ள நிபுணர்களால் விஞ்ஞான முறையில் சூப்பர் லோடி மோல்டில் ரிட்ரெட் செய்து தரப்படும். புதிய தோற்றம் சிறந்த சேவை, கூடுதலான மைல்கள்.

A.R.C. பாதுகாப்பின் சின்னம்.

தி ஆனைமலைஸ் ரிட்ரேடிங் கார்ப்பரேஷன்.

42, மவுண்ட்ரோடு, கிண்டி, சென்னை-32.



ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி
ரேணுகா பிரிண்டர்ஸ், சென்னை-600020
வெளியிட்டவர் : ச. பிரகதம்
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.